# சிவன் கூத்தும் சினிமா கூத்தும் ஒன்றா ?






D.A.ஜோசப்

www.dajoseph.com

E-mail : deyeje@yahoo.com

பேரன்புடையீர் !

சிவபெருமானும் கூத்தாடியல்லவா? என்று கூறி சமூகச்சினிமாக் கூத்தாடிகளின் தகுதியைச் சிலர் உயர்த்துகிறார்கள். இது நியாயமா?. இரண்டு கூத்துக்கும் உள்ள வேறுபாடுகளை இதோ படித்துப் பாருங்கள்.

| சிவனின் கூத்து | சினிமாக்கூத்து |
|---|---|
| 1. இது ஆத்ம நாடகம். | 1. இது உடல் நாடகம். |
| 2. பிரபஞ்சத்தின் அசைவுகளுக்கும் இதற்கும் தொடர்புண்டு என்பர் சைவர். | 2. இது நிமிடநேர மகிழ்ச்சி தரும். அவ்வளவே ! |
| 3. இதைப் பார்த்தால் நம் புண்ணியம் கூடும். | 3. ஒவ்வொரு இன்பத்துய்ப்பிலும் புண்ணியம் குறைகிறது என்ற அடிப்படையில் இதைப்பார்த்தால், இதனால் நம் புண்ணியத்தை இழக்கிறோம். |
| 4. இதைப்பார்த்தால் பாவ எண்ணங்கள் தோன்ற மாட்டா. | 4. இதைப்பார்த்தால் பாவ எண்ணங்கள் தோன்றும். சினிமாவில் சொல்லப்படும் நல்ல கருத்துக்களை விட தீய தாக்கமே அதிகம் என்பது உளவியல் கணிப்பு. |
| 5. பணச்செலவில்லை. | 5. பணவிரயம்உண்டு. |
| 6. தொடர்ந்து ரசித்தால் கைலாசம் கிடைக்கும் என்பது சைவ நம்பிக்கை. | 6. இதனால் நரகம்தான் கிட்டும். |
| 7. இதை ரசிப்பவர்கள் வேத சாத்திரங்களில் ஆர்வம் ஏற்பட்டு விற்பன்னர்கள் ஆவார்கள். | 7. இதனால் நமக்கு உள்ள படிப்பும் மறந்து போகும். |
| 8. மனதில் ஞான வைராக்யம் ஏற்படும். | 8. உலகியல் அஞ்ஞானப் பற்று வளரும். |
| 9. இந்த ரசனையின் உச்சகட்டத்தை அடைந்தவர்கள் நாயன்மார்களாகி உள்ளார்கள். | 9. இதில் உச்சகட்டத்துக்குப் போனவர்கள் சகல தீய பழக்கங்களும் உண்டாகி போட்டி, பொறாமை, இவற்றால் வீணாகிறார்கள். |

திருப்புக.......

| சிவனின் கூத்து | சினிமாக்கூத்து |
|---|---|
| 10. சிவனுக்கு இதில் சுயநலம் இல்லை. | 10. நடிகனுக்கு பணவெறி, புகழ்வெறி, உண்டு. மக்கள் ஒழுக்கம் பாழ் ஆனாலும் தான் மேன்மை அடைந்தால் போதும் என்று எண்ணுவர். |
| 11. சிவன் மன்மதனை எரித்தார். | 11. இதனால் காம விகாரம் அதிகமாகும் ! |
| 12. தில்லையில் இதை விஷ்ணு ரசித்தார். | 12. ராமர், கலைத்துறையில் அதிகம் நாட்டம் இருந்தால் மனிதன் வீணாவான் என்கிறார். (பரதகீதை) |
| 13. இதனால் திருமணவாழ்வு பாதிப்படையாது. | 13. வக்கிரமான கதைகளைப் பார்ப்பதால், விவாகரத்து, கள்ளக்காதல் ஆகியவை அதிகரிக்கின்றன. |
| 14. சிவன் மதுரையை ஆண்ட போது மக்கள், பஞ்சம், பசி, மழையின்மை, அதிகமழை, வெள்ளம், கடல்நீர் ஊருக்குள்ளே வருதல், நோய், ஒழுங்கீனம் இன்றி வாழ்ந்தார்கள். தமிழகத்தின் பெருமை பாரெங்கும் பரவியது. | 14. ஐந்து சினிமாக்காரர்கள் வரிசையாக தமிழகத்தை ஆண்டார்கள். அப்போது இப்படிப் பெருமைகள் ஏதாவது உண்டா ? |

கூத்தாடி என்பது புனிதமான சொல் அதைக் கொச்சைப் படுத்தாதீர்கள். சினிமா மோகத்திலிருந்து விடுபடுவோம்! சிறப்புடன் வாழ்வோம்!. இதைப்பிரதி எடுத்து நண்பர்களுக்கு கொடுங்கள். சமூக நலனில் அக்கறை கொள்ளுங்கள்.

ஆன்மீகச் சொற்பொழிவாளர் **D.A.** ஜோசப்.


முகவரி:

D.A.Joseph,
18.Fourth Cross,
Rainbow Nagar,
Pondicherry 605 011.
Phone : 0413-2210187
Website : www.dajoseph.com E Mail : deyeje@yahoo.com